T.C = 019

**001/DM/21**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## SECOND CLASS LANGUAGE TEST — PART – A WRITTEN EXAMINATION (TRANSLATION, COMPOSITION, LETTER WRITING AND LANGUAGE SKILLS)

(Without Books)

Maximum Time : 2.30 hours — Maximum Marks : 100

குறிப்பு :

1. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

2. வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.

3. கையெழுத்து தெளிவாகவும், விடைகள் குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

### பகுதி — 1

1. ஆங்கிலப் பத்தியைத் தமிழாக்கம் செய்க. (1 × 10 = 10)

Letter writing is an art, this can be perfected through constant practice. We write Letters to keep in touch with friends and relatives and to carry important information. Letters are a form of conversation, because, they involve personal and direct communications between two people. So, every educated person should know how to write a clear and readable letter.

கீழ்க்காணும் தலைப்புகள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக. (2 × 15 = 30)

2. கணிப்பொறியும் பயன்பாடும்

3. தாய்மொழி வழிக் கல்வி

4. ஆண்டு ஊதிய உயர்வு வேண்டி விண்ணப்பம் வரைக. (1 × 10 = 10)

[Turn over

## பகுதி — 2

5. கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பத்தியைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். (5 × 1 = 5)

கடல் வாணிகத்தில் தமிழர் சிறந்திருந்தனர்; பொன்னும், மணியும், முத்தும், துகிலும் கொண்டு கடல் கடந்து வாணிகம் செய்தனர். பண்டைத் தமிழகத்தில் துறைமுகப்பட்டினங்கள் பலவிருந்தன. பூம்புகார் முதலான பெருநகரங்கள், வணிகர் வாழும் இடங்களாக இருந்தன. கிறித்து பிறப்பதற்கு முன்பே, கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரிசியும், மயில்தோகையும், சந்தனமும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன. கி.மு. பத்தாம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும்,மயில்தோகையும், வாசனைப் பொருள்களும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன. தமிழர்களுக்குச் சாவக நாட்டுடனும் கடல் வாணிகத் தொடர்பு இருந்தது.

வினாக்கள் :

(அ) தமிழர் எந்த வாணிகத்தில் சிறந்திருந்தனர்?

(ஆ) கடல் கடந்து வணிகம் செய்த பொருட்கள் யாவை?

(இ) அரிசி, மயில்தோகை மற்றும் சந்தனம் எந்தெந்த நாடுகளுக்குத் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன?

(ஈ) அரசன் சாலமனுக்கு அனுப்பப்பட்ட பொருட்கள் யாவை?

(உ) தமிழர்களுக்கு எந்த நாட்டுடன் கடல் வாணிகத்தொடர்பு இருந்தது?

6. கொடுக்கப்பட்டுள்ள சூழ்நிலைக்கேற்ப உரையாடலை நிறைவு செய்க. (5 × 1 = 5)

கடைக்காரர் : வாருங்கள் : தங்களுக்கு என்ன வேண்டும்?

வாடிக்கையாளர் : ________________.

கடைக்காரர் : ஏன் இந்தப் புத்தகத்தை மாற்றித் தர வேண்டும்?

வாடிக்கையாளர் : ________________.

கடைக்காரர் : இந்தப் புத்தகத்தை நீங்கள் எப்பொழுது வாங்கினீர்கள்?

வாடிக்கையாளர் : ________________.

கடைக்காரர் : இதற்கான இரசீதைக் கொண்டு வந்துள்ளீர்களா?

வாடிக்கையாளர் : ________________.

கடைக்காரர் : சரி, இந்தப் புதிய புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

வாடிக்கையாளர் : ________________.

## பகுதி — 3

மொழிப் பயிற்சி (40 × 1 = 40)

பின்வரும் வினாக்களுக்கு விடையளி :

7. சார்பெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?

8. 96 - எண்ணைத் தமிழெண்ணால் எழுதுக.

9. முதலான – சொற்றொடரில் அமைத்து எழுதுக.

10. Washing Machine – என்ற சொல்லுக்குப் பொருத்தமான தமிழ்ச்சொல் தருக.

11. வாரத்தின் நான்காம் நாள் என்ன கிழமை?

12. ஆனி மாதத்திற்கு அடுத்த மாதம் என்ன?

விடுபட்ட எழுத்துக்களை எழுதுக.

13. த, தா, ____, ____, து, தூ, ____, ____, ____

அகர வரிசைப்படுத்துக.

14. தெப்பம், பைந்தமிழ், திருவிழா, புதுமனை, தையல், பொதுவுடமை, போராட்டம், தூய்மை, பாராட்டு, துணிவு.

நெடில் எழுத்துக்களைக் கண்டறிந்து எழுதுக.

15. பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

உரிய நிறுத்தற்குறி இடுக.

16. மா பலா வாழை ஆகியன முக்கனியாகும்.

17. என்னே இனிமை குயிலின் இசை

பிழையைத் திருத்தி எழுதுக.

18. யானை முழங்கும்

19. சிங்கம் பிளிறும்

விடைக் கேற்ற வினா எழுதுக.

20. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்களாகும்.

21. பெரியபுராணத்திற்குச் சேக்கிழார் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம்

வினைச் சொற்களை எடுத்து எழுதுக.

22. காற்று வீசியது

23. மரம் ஆடியது

ஒருமை, பன்மைப் பிழையைக் கண்டறிந்து எழுதுக.

24. பறவைகள் பறந்தது

முதல் எழுத்தை மாற்றிப் புதிய சொல் ஒன்றை எழுதுக.

25. ஊக்கம்

மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.

26. மறம் வலர்ப்போம்! மலை பெருவோம்!

27. தமிழ்நாட்டின் தேசிய மரம் எது?

இரு பொருள் தருக:

28. மாலை

பேச்சு வழக்குச் சொல்லை எழுத்து வழக்குச் சொல்லாக மாற்றுக.

29. அஞ்சி ரூவாக்கி மஞ்ச வாங்கியா.

இறந்த காலச் சொல்லை எடுத்து எழுதுக.

30. வந்தான் வருவான் வருகின்றான்

பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

31. கும்பாபிஷேகம்

நூலையும் நூலாசிரியர் பெயரையும் பொருத்துக :

32. சத்திய சோதனை – திருவள்ளுவர்

33. பகவத் கீதை – கிறித்துவ சமய நூல்

34. திருக்குறள் – காந்தியடிகள்

35. பைபிள் – இந்து சமய நூல்

பால் வகையை எழுதுக.

36. லட்சுமி வந்தாள்

திணை வகையை எழுதுக.

37. மாடுகள் மேய்ந்தன.

38. Keyboard – கலைச் சொல்லைத் தமிழாக்கம் செய்க.

சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

39. பெண்கள் வயலில் —————— பறித்தனர் (கலை, களை)

40. வீரன் —————— பிடித்து சண்டையிட்டான் (வாள், வால்)

41. குடம் – இடை எழுத்தை மாற்றி புதிய சொல்லை எழுதுக.

42. M.A. பட்டப் படிப்பைத் தமிழில் விரித்து எழுதுக.

பொருந்தாத சொல்லை எடுத்தெழுதுக.

43. கண்டு, கேட்டு, உண்டு, குண்டு

பெயர்ச் சொல்லை எடுத்து எழுதுக.

44. (அ) பாரதி

(ஆ) பாடினான்

(இ) சென்றான்

பொருத்தமான சொல்லை எழுதுக.

45. பசுக்கள் —————— (மேய்ந்தது, மேய்ந்தன)

46. கணி, கனி, என்பதன் பொருளை எழுதுக.

---